## கப்பற்துறை அபிவிருத்தி நிதியம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 367 மில்லியன் மற்றும் 03 அரச நிறுவகங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 93 மில்லியன் கூட்டுத்தொகையானவை ஐந்தொகையில் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. ஒரு அரச கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 55 மில்லியன் தொகையில் ரூபா 50 மில்லியன் 15 ஆண்டுகாலமாக நிலவிவருவதுடன் எஞ்சிய ரூபா 05 மில்லியன் 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக நிலவிவருகின்றன. இந் நிதியத்தை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் நிதியத்தால் எடுக்கப்பட்டிராததுடன் இதற்காக அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 110,941 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அச் சொத்துக்கள் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவினக் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதியத்தின் வேறுபாடுகள் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பயணிகள் கப்பல் சேவையிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 13,523,734 தொகை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிதியத்தின் மீளாய்வாண்டிற்கு உரித்தான நிலையான சொத்துப் பெறுமானத்தேய்வாக ரூபா 19,615 தொகையான செலவினம் மாத்திரம் ஏற்பட்டிருந்தமையால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 19,615 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானச் செலவினக் கூற்றின் பிரகாரம் ரூபா 23,108,378 தொகையான மிகைக்கு ஒப்பாக நிதி விளைவில் ரூபா 23,127,993 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

தரகுப் பணம் அறவிடப்படுவதற்கு எதிராக கப்பல் முகவர் நிறுவகத்தால் நிதியத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மூலம் பணத்தை அறவிடுவதைத் தடுக்கும் கட்டளை 2006 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த காரணத்தால் நிதியத்தின் முக்கிய வருமான மூலத்தில் முன்னைய 6 ஆண்டுகளில் எவ்வித வருமானமும் உழைக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. மேலும் நிதியத்திடமிருந்த நிலையான சொத்தாக கணனியும் நிழற்படப் பிரதி இயந்திரங்கள் சிலவும் மாத்திரம் இருந்தமையால் எவ்வகையிலும் செயற்பாட்டு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கோ அல்லது செயற்படுத்துவதற்கோ நிதியத்திற்கு சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளமையால் எவ்வித செயற்திறனும் அறிக்கையிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

நிதியத்தால் 2011 யூன் மாதம் முறையே ரூபா 35,000,000 தொகையும் ரூபா 25,000,000 தொகையுமாக ரூபா 60,000,000 கூட்டுத்தொகையான கப்பற்துறை

செயற்பாட்டு கூறிற்குத் தேவையான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக அரச கடற்படை கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இத் தொகையில் ரூபா 46,467,266 தொகை செலவிடப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீதியான ரூபா 13,523,734 தொகை 14 மாதங்களுக்கு மேலான காலமாக விளைவற்று வெளி நிறுவகத்தில் இருப்பதற்கு இடமளித்து பின்னர் அத் தொகை 2012 ஆகஸ்ட் 12 ஆம் திகதி திறைசேரிக்கு மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயணிகள் கூறின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மூலதனச் செலவினத்தை ஏற்பதற்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 29,686,523 தொகையான கட்டிட வாடகை, போக்குவரத்து, ஊழிய ஊதியம், மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய சிறு செலவினங்கள் போன்ற மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 11,883,238 கூட்டுத்தொகையான பணத்தைச் செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பயணப் பொதி ‘‘ஸ்கான்‘‘ உபகரணம் உலோகப் பொருட்களை இனங்காணும் உபகரணம் மற்றும் இரும்பு ட்ரொலி என்பன எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கட்டணம் அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 4,906,505 கூட்டுத்தொகையான கணனி மற்றும் காரியாலய மரத்தளபாடங்கள் வரிசை அமைச்சிற்கும் அரச கடற்படை கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது.

ஆகையால் பயணிகள் கூறை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 46,476,266 தொகையான மொத்தத் தொகையும் உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது வேறு செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் செலவினத்தை எதிர்பார்த்த நோக்கத்தை அடைவதற்குப் பயன்படுத்தியிருக்கவில்லை.

## 3.3 கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும்

நிலையான சொத்துக்கள் சிலவும் அறவிடப்படாத கடன்பட்டோர் சிலரை அடக்கிய நிதியம் எவ்வித செயற்பாடும் இன்மையால் நிதியத்திற்கு உரித்தான கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கடன்பட்டோர்

(இ) நிலையான சொத்துக்கள்